**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். : 41/மா/2022**
**நாள் : 24.5.2022**

திரு. எம். சுந்தரம்,
சேலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், கிச்சிப்பாளையம், சன்னியாசி குண்டு எக்ஸ்டன்சன், திருமலை நகர், 414 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. எம். சுந்தரம், என்பவரின் 12.4.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 41/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், கிச்சிப்பாளையம், சன்னியாசி குண்டு எக்ஸ்டன்சன், திருமலை நகர், 414 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. எம். சுந்தரம், என்பவர் தனது 12.4.2022 நாளிட்ட மனுவில் "நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வசிக்கும் சேலம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணி கடந்த 2011-ம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது வரை நடைபெற்று வருகிறது. சேலம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக சிப்பம் 1 மற்றும் 3ம் மெசர்ஸ் பி.எஸ்.வி.சி.பி.எல்.ஹைதராபாத் என்ற ஒப்பந்ததாரர் 30.06.2013 வரை பணிகள் செய்துவிட்டு பின்னர் பணியினை சரிவர செய்யாததால் அவருடைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி பணி மீண்டும் 2015-ல் சுப்பையா கன்ஷ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் சென்னை என்ற மற்றொரு ஒப்பந்ததாரருக்கு மேற்படி திட்டப் பணி ஒப்பந்தம் கடந்த 06.03.2015ல் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது வரை திட்டப்பணிகள் மேற்கொண்டு வரப்படுகிறது. சிப்பம் இரண்டுக்கான பணியை ஆர்.ஏயு.எஸ். கன்ஷ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் ஹைதராபாத் ஒப்பந்ததாரர் பணியினை செய்யாமல் இருந்ததால் 31.12.2016-ல் பணி ரத்து செய்யப்பட்டு மீதமுள்ள பணிகளை முடிக்க வி.வி.வி. கன்ஷ்டரக்ஷ்ன் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரருக்கு 28.10.2020-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது மற்றும் சிப்பம் ஒன்று - மூன்றில் விடுபட்ட ஒரு பகுதியை முடிக்க வி.என்.வி. பிரைவேட் லிமிடெட் கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு ஒப்பந்ததாரருக்கு22.10.2020-ல் பணி ஆணை வழங்கப்பட்டது.

- ❖ இவ்வாறு மேற்படி பாதாள சாக்கடை பணியானது சாலை அமைப்பு, நகர் அமைப்பு, மண் பரிசோதனை, வடிகால் அமைப்பு மற்றும் நிலத்தடி ஆய்வு ஆகியவற்றை முறையாக

திட்டமிடப்படாத திட்டப்பணிகள் செயல்முறைபடுத்தப்பட்டது. மேலும் மேற்படி பணி ஆனது நவீன முறைப்படி நன்கு தரமான M.D.P.E., H.D.P.E. போன்ற பைப்கள் மற்றும் தரமான சேம்பர்கள் கொண்டு செயல்படுத்தப்படாமல் தரமற்ற மண் சிமெண்ட் பைப்கள் பதிக்கப்பட்டு மேற்படி திட்டப்பணி ஆனது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறாக மேற்படி பதிக்கப்பட்ட பைப்களும், சேம்பர்களும் பணிகள் நிறைவு பெற்று செயல்பாட்டிற்கு வரும் முன்னதாகவே உடைந்து வருகின்றன.

❖ மேலும் சாலைகளின் அமைப்பு மற்றும் அளவுகள் கணக்கிடப்படாமல் செயல்படுத்தப்பட்டதால் பதிக்கப்பட்ட பைப்களிலும் சேம்பர்களிலும் பாதாள சாக்கடை கழிவு நீர் முறைப்படி செல்லாமல் சாலைகளில் தேங்கி சாலையோர சாக்கடைகளிலும், நீர் நிலைகளிலும் கலக்கிறது. இதனால் நோய் தொற்று பரவும் வாய்ப்பு உள்ளது. மேலும் இதனை சரிசெய்ய தற்பொழுது மாநகராட்சி முழுவதும் சாலையோர சாக்கடை அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் சேலம் மாநகர சாலைகள் குறுகிவிட்டன. இவ்வாறு பாதாள சாக்கடை தோல்வியுற்று மீண்டும் சேலம் மாநகராட்சி சாலையோர மழைநீர் கால்வாய் வழியாக கழிவு நீர் செல்லவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் சாதாரண சாக்கடை பணிகளுக்காக ரூ.60,78,27,059/- செலவிடப்பட்டுள்ளது.

❖ மேலும் இந்த பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு செய்ய சேலம் மாநகராட்சியில் வெள்ளை குட்டை, ஆணைமேடு, மான்குட்டை, வண்டிபேட்டை ஆகிய நான்கு பகுதிகளில் ரூ.64,71,49,838/- தொகை செலவில் 4 சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நிலையங்களில் இரண்டு மட்டும் செயல்பட்டு வந்தது. தற்போது வெள்ளைகுட்டை சுத்திகரிப்பு நிலையம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படும் நீர் விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் மேற்படி சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சரியாக சுத்திகரிக்கப்படாத நீர் மீண்டும் ஓடைகளில் கலக்கிறார்கள். அணைமேடு சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேறும் சுத்திகரிக்கப்படாத நீரும் அணைமேடு ஓடையில் தான் கலக்கிறது.

மான் குட்டை சுத்திகரிப்பு நிலையத்தில் செப்டிக்டேங்க் லாரிகளில் வரும் கழிவுகள் ஒரு பகுதி சுத்திகரிக்கப்பட்டு அங்கு உள்ள ஓடையில் தான் கலக்கிறது. மீதமுள்ள செப்டிக்டேங்க் கழிவுகள் நேரடியாக ஓடையில் சுத்திகரிக்கப்படாமல் கலக்கப்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபட்டு பொதுமக்களுக்கு பல்வேறு வியாதிகள் பரவ காரணமாக உள்ளது. சந்தைபேட்டை சுத்திகரிப்பு நிலையம் இதுவரை செயல்படாமல் உள்ளது. இவ்வாறு பெரும் பொருட்செலவில் ஏற்படுத்தப்பட்ட மேற்படி நிலையங்கள் எந்தவித பயனும் இன்றி உள்ளது.

❖ இந்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை விபரம் (துகவல் உரிமைச் சட்டத்தின் கீழ்)

| | | | |
|---|---|---|---|
| 1. | 23.02.2006-ல் | - | 149.39 கோடி |
| 2. | 31.12.2016 –ல் | - | 85.39 கோடி |
| 3. | 22.10.2020-ல் | - | 14.60 கோடி |
| 4. | 2010 முதல் 2020 வரை | - | |
| 5. | சாதாரன சாக்கடை செலவினங்கள் | - | 60,78,27,059 |
| | 17.02.2018-ல் 60 வார்டுகளில் பாதாள சாக்கடை அமைத்த சாலைகளை | | |

6. சீரமைக்கும் பணிகளுக்கு முன்னாள் முதல்வர் எடப்பாடியார் அவர்கள் ஒதுக்கியுள்ளார். - 94.39 கோடி

மொத்தம் - 404,55,27,059

(நானூற்று நான்கு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து இருபத்தி ஏழு ஆயிரத்து ஐம்பத்து ஒன்பது ரூபாய் மட்டும்)

❖ பாதாள சாக்கடை திட்டப்பணி சரியாக திட்டமிடப்படாததாலும் முறையாக செயல்படுத்தப்படாததாலும், தரமற்ற பைப்களையும், சேம்பர்களையும் பதித்ததால் சாலைகளில் பாதாள சாக்கடை நீரும் சரியாக வெளியேராமல் நோய்த் தொற்று பரவும் அபாயம், முறையற்ற பராமரிப்பு, பெரும் பொருட் சேதம் ஏற்பட்டு மேற்படி பாதாள சாக்கடை பணி தோல்வியுற்ற நிலையில் மக்களின் பெரும் தொகையானது வீணடிக்கப்பட்டது. எனவே மேற்படி பணியானது முறைப்படுத்தப்பட்டு பணிகளை மேற்கொண்டால்தான் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேறும்.

❖ நான் இதுநாள் வரை 2013 ஆம் ஆண்டுகளிலிருந்து பல விண்ணப்பங்கள் சேலம் மாநகராட்சிக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் விண்ணப்பித்தும், இதுநாள்வரை சரியான பதில் வரவில்லை. நான் விண்ணப்பித்த நகல்களையும் தற்போது தரமற்ற பைப்கள், கழிவு நீர், மழை நீர் கால்வாயில் கலப்பது சரியாக சுத்திகரிப்பு செய்யாத நீர் ஓடைகளில் கழிவு நீர் கலப்பது ஆகிய புகைப்படங்களையும் இதனுடன் இணைத்துள்ளேன்.

மேலும் இதுவரை முடிவுற்ற வேலைகளை சரி பார்க்கவும், இனிமேல் பணிகளை சரியான முறையில் முடிக்கவும் தகுதி வாய்ந்த புராஜக்ட் மேனேஜ்மெண்ட் ஆய்வாளர்களையோ அல்லது ஒரு தரமான நிறுவனத்தை அமர்த்தி பாதாள சாக்கடை பணிகளை தரமுள்ள M.D.P.E. மற்றும் H.D.P.E. போன்ற தரமான பைப்புகளை பதித்து எந்தவித குறையும் இல்லாமல் சரிவர முடிக்க ஏற்பாடு செய்யுமாறு அதுவரை தற்போது நடந்து வரும் தரக்குறைவான பணிகளை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன் மற்றும் இதுவரை ஏற்பட்ட செலவினங்களுக்கு ஏற்ப பணிகள் முடிக்கப்பட்டுள்ளனவா என்பதை லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் விசாரணை மேற்கொள்ளவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மனு மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பாதாள சாக்கடை பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் மனு மீது விசாரணை நடத்தும் போது என் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பாதாள சாக்கடை திட்டம் என்ன நோக்கத்திற்காக செயல்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

எனவே தயவு கூர்ந்து சேலம் மாநகராட்சியில் நடைபெறும் கழிவுநீர் பாதாள சாக்கடை திட்டம் பணிகளை மக்களுக்கு நலம் பயக்கும் விதமாக செயல்படுத்தவும் மேலும் தற்போது செயல்படுத்தப்பட்ட தவறான முறைகளை நிவர்த்தி செய்திடவும் தற்போது தவறான முறையில் நடந்துவரும் கட்டுமான பணிகளை நிறுத்தியும், தவறு செய்யும் அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.4.2022 நாளிட்ட கடிதம் மூலம் சேலம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது:

இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 28.4.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 11.5.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

முறையீட்ட மனுதாரர் 11.5.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

> "சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போதுவரை நடைபெற்று வருகிறது. இப்பணிகள் சாலை அமைப்பு, நகர அமைப்பு, மண் பரிசோதனை, வடிகால் அமைப்பு மற்றும் நிலத்தடி ஆய்வு ஆகியவை முறையாக செய்யப்படாமலும், நவீன முறைப்படி நன்கு தரமான M.D.P.E. போன்ற பைப்புகளைக் கொண்டும் தரமான சேம்பர்கள் கொண்டும் மேற்கண்ட திட்டத்தை சேலம் மாநகராட்சியால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, மேற்கண்ட திட்டப் பணி மக்களுக்கு நலம் பயக்கும் விதமாக செயல்படுத்தவும், தவறாக திட்டப்பணிகளை மேற்கொண்டுள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட திட்டம் குறித்து நடைபெறும் பணிகள் குறித்து எனது 11.5.2022 நாளிட்ட குறிப்பினையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்." மனுதாரர் மேற்கண்ட குறிப்பில் திட்டம் தொடங்கி 12 ஆண்டுகள் கடந்தும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என குறிப்பிட்டு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

- பாதாள சாக்கடை திட்டத்திற்கு முறைப்படி நிலத்தடி மண் பரிசோதனை முறையாக செய்யப்படவில்லை.
- இந்தியா சுதந்திரம் வாங்கியதற்கு முன்பாக இருந்த திட்டம் அமைப்பின்படி இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இன்றைய நவீன முறைகள் நிறைய இருக்கும் தருணத்தில் இந்த திட்டத்தின் செயல்முறை வெற்றி அடையாது என 2013லேயே மாநகராட்சிக்கு தெரிவித்துள்ளேன்.
- 2013ல் இருந்து 2021 வரை பல கடிதங்கள் மாநகராட்சிக்கு எழுதியும் எந்த பதிலும் இல்லை.
- கடந்த ஐந்து மாதங்கள் முன்பாக ஒரு பதில் மாநகராட்சியில் இருந்து வந்தது. அதுவும் முறையானதாக இல்லை. அதில் மேலும் திட்டத்திற்கு 530 கோடி ரூபாய் கோரப்பட்டுள்ளது.
- இந்த திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக மாநகராட்சி இன்ஜினியரிங் டிப்பார்ட்மண்ட்டில் இருந்து அலுவலர்கள் பம்பாய், டெல்லி, கொல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் இத்திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை நேரில் சென்று பார்த்து வந்துள்ளார்கள். அப்படி இருந்தும் நவீன திட்டங்களை விட்டு பழைய முறை திட்டத்தை நடத்தி வருகிறார்கள்.
- இத்திட்டத்தின் மூலம் வருடம்தோறும் பல ஆயிரம் கோடி ரூபாய் மாநகராட்சிக்கு சேதம் ஏற்படும்.
- இத்திட்டத்தில் முறைப்படியான சரியான ஆழத்தில் பதிக்கப்பட வேண்டிய மண், சிமெண்ட், பைப்புகள் பதியப்படவில்லை.

- மேலும் மண், சிமெண்ட் பைப்புகள், மேனுவல் சேம்பர்கள் மிகவும் தரமற்றவையாக திட்டம் ஆரம்பித்து ஓரிரு வருடங்கள் முன்னதாகவே உடைந்துவிட்டன.
- இத்திட்டத்தில் அமைக்கப்பட்ட நான்கு சுத்திகரிப்பு நிலையங்களில் இரண்டு மட்டும் செயல்படுகிறது. அதுவும் முறைப்படி செயல்படாமல் ஒரு பக்கம் இருந்து கால்வாயில் வரும் கழிவு நீரை சுத்தம் செய்து மறுபக்கம் உள்ள சுத்தம் செய்யாத கால்வாயில், வாய்கால்களில் மீண்டும் கலக்கிறார்கள். இதனால் மாநகராட்சி மின்சார கட்டண செலவும், ஆட்கள் சம்பளமும் வீணாகிறது. சுத்திகரிக்கப்பட்ட நீர் விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் தான் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இவர்கள் மீண்டும் கழிவு நீரிலேயே கலக்கிறார்கள். சேலத்தில் 500க்கும் அதிகமான நூல் சாய தொழிற்சாலைகள் உள்ளது. மிகப்பெரிய துணி மில்கள் 15 உள்ளன. இவ்வளவு இருந்தும் அங்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகம் செய்யாமல் மீண்டும் சுத்திகரிக்கப்படாத ஓடைகளிலும் ராஜவாய்கால்களிலும் கலக்கிறார்கள். இதனால் நகரின் பல பகுதிகளில் இந்த வாய்க்கால் குறுக்கே செல்வதால் நகர் முழுவதும் பெரும் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது.
- சேலம் நகராட்சியில் சாலைகளில் 70% பாறைகளாகவும் மேடு பள்ளங்களாகவும் உள்ளதால் சரியான நீர் நிலையில், நீர் செல்ல முடியாததால் பாதாள சாக்கடை திட்டம் தோல்வியுற்றது.
- தோல்வியுற்ற காரணத்தால் ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் நடைபெறும் தொகையினை எடுத்து, அந்த பணத்தில் சாலைகளில் இரு புறமும் மிகப்பெரிய கால்வாய்களை வெட்டி வருகிறார்கள். இதனால் சாலைகள் அகலம் குறைந்து மாநகரம் முழுதும் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டுள்ளது.
- இத்திட்டத்தை கைவிட்டுவிட்டு முறையான திட்டத்தில் செயல்பட்டால் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் சரியான பாதாள சாக்கடை திட்டத்தை அமைக்க முடியும். இல்லையெனில் வருடம் தோறும் பாதாள சாக்கடை அடைப்பை தோண்டி சரிசெய்ய பலகோடி ரூபாய்கள் மாநகராட்சிக்கு செலவாகும். மக்கள் வரிப்பணம் விரையமாகும்.
- முக்கியமாக இத்திட்டத்தில் நகர் முழுவதும் உள்ள வீடுகளிலும், மருத்துவமனைகளிலும், தொழிற்சாலைகளிலும் இருந்து வரும் கழிவு நீர் பாதாள சாக்கடைகளில் செல்லாமல் சாக்கடைகளிலும் ஓடைகளிலும் தான் செல்கிறது. இதனால் பெரும் தொற்று சேலம் மாநகரத்தில் பரவ வாய்ப்புள்ளது. எனவே இந்த முறை திட்டத்தை அவசியம் மாற்றி அமைக்க வேண்டும்.
- திட்டமிட்டு மாநகராட்சி அலுவலர்களால் நவீன முறைகள் இருந்தும் இத்திட்டத்தை ஆரம்பித்ததற்கு உண்டான நஷ்டத்தையும் அவர்களுக்கு தண்டனையையும் பெற்றுத் தரவேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்:

சேலம் மாநகராட்சியின் உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் இருவரும் 11.5.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

"சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ரூபாய் 139.39 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் 421.65 கிலோ மீட்டர் நீளத்திற்கு பதிக்கும் பணிகள் 3 சிப்பங்களாக நடைபெற்று வருகின்றன. பணிகளை மேற்கொள்ளும்போது கடினப் பாறைகள்

அதிக அளவில் வந்ததாலும், அணுகு சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதால், கூடுதல் நீளத்திற்கு கழிவு நீர் குழாய்கள் பதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இப்பணிகள் இன்னும் ஒருவருட காலத்திற்குள் முடிவடையும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் சேலம் மாநகராட்சி ஆணையரின் 10.5.2022 நாளிட்ட அறிக்கையினையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்கள்.

ஆணையர், சேலம் மாநகராட்சி தனது 10.5.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த Tamil Nadu Urban Development Project (TNUDP III) மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட தொழில் நுட்ப ஆலோசகர்களாக திருவாளர் கன்சல்டிங் எஞ்ஜினியரிங் சர்வீஸ் இந்தியா (பி) லிமிடெட் சென்னை நிறுவனம் நியமிக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் சேலம் மாநகராட்சி புவி அமைப்புகளுக்கு ஏற்றவாறு ஆய்வு செய்து வீடுகளில் இருந்து சேகரம் செய்திடும் பாதாளசாக்கடை கழிவுநீர் தானாக புவி ஈர்ப்பு உந்து விசை சக்தியால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரும் வகையில் முதற்கட்டமாக பழைய சேலம் நகராட்சி பகுதிகளில் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து வழங்கியுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு அரசாணை எண்.60(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள்23.2.2006ல் ரூ.149.39/- கோடிக்கு கழிவுநீர் குழாய்கள் 421.65 கி.மீ. நீளத்திற்கு பதிக்கும் பணிகள் 3 சிப்பங்களாகவும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி 4 சிப்பங்களாகவும் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி 28.06.2007 வழங்கப்பட்டு, உலக வங்கி நிறுவனமான டி.என்.யூ.டி.பி.III வசம் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கு 09.10.2007ல் ஆட்சேபனை இன்மை சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில் இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஆதாரத்தினை தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் பெற்று செயல்படுத்த கீழ் கண்டுள்ளவாறு அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>**திட்டத்தின் நிதி ஆதாரம்**</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசு மானியம் / டி.என்.யூ.டி.பி. – III | : | ரூ.10.00 கோடி |
| 2. | மாநகராட்சி மற்றும் பொது மக்களின் பங்கு தொகை | : | ரூ.78.85 கோடி |
| 3. | கடன் (டி.என்.யூ.டி.பி. – III) | : | ரூ.60.54 கோடி |
| | **மொத்தம்** | : | **ரூ.149.39 கோடி** |

<u>**சிப்பம்–1**</u>

பாதாள சாக்கடைத் திட்டத்தின் சிப்பம் - 1ல் , மண்டலம் I மற்றும் IV-ல் 86.17 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு ஐந்தாவது முறையாக 20.08.2009ம்

தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் குறைந்த விலை விகிதத்தில் ரூ.15.50 கோடி ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர்கள், பிஎஸ்விசிபிஎல் – பிபிஐபிஎல் (ஜே.வி.), ஹைதராபாத் (M/s. PSVCPL-BPIPL (JV), Hyderabad) என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு 18.03.2010ந் தேதியில் வழங்கப்பட்டு மேற்படி பணியினை 30 மாதங்களில் செய்து முடிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், 36 மாத காலம் முடிவடைந்த நிலையிலும், ஒப்பந்த நிறுவனத்தால் 22.87 கி.மீ. நீளத்திற்கு மட்டுமே கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு ரூ.4.69 கோடி தொகை செலவிடப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் மார்ச்-2013 முதல் பணிகளை மேற்கொள்ளாமல் நிறுத்திவிட்ட காரணத்தால் மாமன்ற ஒப்புதல் பெற்று கடந்த 15.07.2013ம் தேதியில் அந்நிறுவனத்தின் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.

மீதமுள்ள பணிகளுக்கு 2013-2014ம் ஆண்டிற்கான செந்தார விலை விகிதத்தின்படி ரூ.25.00 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு மாமன்றம் தனது தீர்மான எண்.132, நாள்:31.07.2013ல் ஒப்புதல் அளித்ததின் பேரில் திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் கடித எண்.15663/2013/டிஓ1, நாள்:30.09.2013ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது.

இச்சிப்பப் பணி முந்தைய ஒப்பந்ததாரரால் ஆங்காங்கே பணிகள் பாதியளவில் விட்டுச்சென்றதால் பொது மக்களின் நலன் கருதியும் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படாமல் இருக்கவும் காலதாமதம் தவிர்க்கும் பொருட்டும் 13.02.2014ந் தேதியில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிக்கு திருவாளர்கள். சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட், சென்னை நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத் தொகையான ரூ.16.19 கோடியை விட 18.98% கூடுதலாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசியம் கருதி மாமன்றம் ஒப்புதல் அளித்ததின் பேரில் 12.05.2014ந் தேதிய தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரை மற்றும் 24.10.2014ந் தேதியில் ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் அறிவுரைகளின் பேரில் 06.03.2015ல் பணி உத்தரவு ரூ.19.27 கோடிக்கு வழங்கப்பட்டது.

மேலும் பணி இடத்தின் தன்மையினை கருதி கால நீட்டிப்பு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் செலவு பட்டியல்கள், பிற துறைகளின் அனுமதி கட்டணம் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகியவற்றுடன் மொத்தம் இதுவரை ரூ.26,68,38,920/- (ரூபாய் இருபத்தி ஆறு கோடியே அறுபத்தி எட்டு இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) செலவினம் கீழ்க்கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிக்கான ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்ட செலவுப் பட்டியல் தொகை | – | ரூ.22,06,51,613/– |
| 2. | பணிக்கான ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட விலை சீரமைப்பு தொகை (Price Adjustment) | – | ரூ.1,54,02,329/– |
| 3. | பிற துறைகளுக்கு செலுத்தப்பட்ட அனுமதி கட்டணம் | – | ரூ.2,39,04,441/- |
| 4. | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | – | ரூ.68,80,537/- |
| | **மொத்தம் செலவினம்** | – | **ரூ.26,68,38,920/–** |

சிப்பம் 1-க்கான பணி ரூ.25.00 கோடிக்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் கோரி ரூ.19.27 கோடிக்கு ஒப்பந்தமிடப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளும் போது இடத்தின் தன்மைக்கேற்ப கடின பாறைகள் அதிக அளவில் வந்ததாலும், அணுகு

சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதால் கூடுதல் நீளத்திற்கு கழிவு நீர் குழாய்கள் பதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாலும், ஒப்பந்த விதிகளின்படி பணிக்கான விலை வித்தியாச தொகை வழங்கப்பட்டதாலும், பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய அனுமதிக் கட்டணம் மதிப்பீட்டில் உள்ளதைவிட கூடுதலாக செலுத்திட கேட்பு பெறப்பட்டு தொகை செலுத்தப்பட்டதாலும், தற்போது மீதமுள்ள அனைத்து பணிகளையும் செய்து முடித்ததால் மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக ஆகும் என்பதால் மதிப்பீடு அளவிற்குள் பணி மேற்கொள்ளப்பட்டது.

சிப்பம் 1க்கான பணிகள் தளத்தின் நிலைக்கேற்ப ஒப்பந்த பணித் தொகையைவிட கூடுதல் ஆகும் நிலை ஏற்பட்டதால் கடந்த 2 வருடங்களாக பணி தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஒப்பந்ததாரரால் தெரிவிக்கப்பட்டு இதன் காரணமாக ஒப்பந்த விதிகள் clause-62, release from performance 62.1 ல் குறிப்பிட்டுள்ளபடி முன்முடிவு செய்து (Foreclosure) தமக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகைகளை வழங்கிட கோரி கடிதம் எண்.119/SCCL/Salem Package-1/2018/Dt.24.06.2020ல் அளித்துள்ளதின்படி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மன்றம் தனது தீர்மான எண்.81, நாள்:01.07.2020ல் பணியினை செய்துள்ளவரை இறுதி செய்து முடிவுக்கு கொண்டுவர அனுமதித்துள்ளது.

ஆகவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட் சென்னை நிறுவனத்தினரின் செய்யப்பட்ட பணிகளுடன் பணியினை முடித்து இறுதி பட்டியல் தயார் செய்து முன்மொழிவுகளை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி பணிக்கான பணி முடிவு அறிக்கை பெறப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

<u>சிப்பம் –3</u>

பாதாள சாக்கடைத் திட்டத்தின் சிப்பம் 3-ல் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கு 184.85 கி.மீ. நீளத்திற்கு அமைத்திட ஐந்தாவது முறையாக 20.08.2009ம் தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் குறைந்த விலை விகிதத்தில் ரூ.37.44 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர்கள். பிஎஸ்விசிபிஎல் – பிபிஐபிஎல் (ஜே.வி.) ஹைதராபாத் (M/s. PSVCPL-BPIPL (JV), Hyderabad) என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு 18.03.2010ந் தேதியில் வழங்கப்பட்டு மேற்படி பணியை 36 மாதங்களில் செய்து முடிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 36 மாத காலம் முடிவடைந்த நிலையிலும், ஒப்பந்த நிறுவனத்தால் 48.25 கிமீ. நீளத்திற்கு மட்டுமே கழிவு நீர் குழாய்கள் பதிக்கப்பட்ட நிலையில் அந்நிறுவனம் கடந்த 2013 மார்ச் மாதம் முதல் பணிகளை மேற்கொள்ளாமல் நிறுத்தி விட்ட காரணத்தால், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை மாமன்ற ஒப்புதல் பெற்று கடந்த 15.07.2013-ம் தேதியில் இரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள பணிகளுக்கு 2013-2014ம் ஆண்டிற்கான செந்தார விலை விகிதத்தின்படி ரூ.61.65 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு மாமன்றம் தனது தீர்மான எண்.132, நாள்:31.07.2013-ல் ஒப்புதல் அளித்ததின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் கடித எண்.15669/2013/டிஓ1, நாள்:30.09.2013ல் தொழில்நுட்ப அனுமதி பெற்று கடந்த 13.02.2014ந் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருவாளர்கள். சுப்பையா கன்ஸ்டிரக்சன்ஸ் கம்பெனி லிமிடெட் சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத் தொகையான ரூ.43.65 கோடி தொகையினை விட 14.99% சதவீதம் கூடுதலாக ரூ.50.20 கோடி என குறிப்பிட்டு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்புதல் அளித்ததின் பேரில் 12.05.2014ந் தேதிய தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரை மற்றும்

24.10.2014ந் தேதியில் ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் அறிவுரைகளின் பேரில் 06.03.2015ல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பணி இடத்தின் தன்மையினை கருதி கால நீட்டிப்பு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் செலவு பட்டியல்கள், பிற துறைகளின் அனுமதி கட்டணம் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகியவற்றுடன் மொத்தம் இதுவரை ரூ.51,36,87,705/- (ரூபாய் ஐம்பத்தி ஒரு கோடியே முப்பத்தி ஆறு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எழு நூற்று ஐந்து மட்டும்) செலவினம் கீழ்க் கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணிக்கான ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்ட செலவுப் பட்டியல் தொகை | – | ரூ.42,79,22,388/– |
| 2. | பணிக்கான ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட விலை சீரமைப்பு தொகை (Price Adjustment) | – | ரூ.3,03,52,096/– |
| 3. | பிற துறைகளுக்கு செலுத்தப்பட்ட அனுமதி கட்டணம் | – | ரூ.4,52,00,000/- |
| 4. | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | – | ரூ.1,02,13,221/- |
| | **மொத்தம் செலவினம்** | – | **ரூ.51,36,87,705/–** |

சிப்பம் 3-க்கான பணியில் பாதாளசாக்கடை பிரதான குழாய் செல்லும் வழித்தடத்தில் நெடுஞ்சாலை துறையினர் ஈரடுக்கு மேம்பால பணியினை காரணம் காட்டி குழாய் பதிக்க அனுமதி வழங்காததால் இப்பணிக்கு அனுமதி கோரி கடிதங்கள் வாயிலாகவும், நேரில் பலமுறை சந்தித்தும், அனுமதி கோரப்பட்டது. இருப்பினும் மேம்பால பணிகள் முடிந்த பிறகு சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என தெரிவித்தனர்.

இது குறித்து TNUIFSL தொழில் நுட்பஆலோசகர் திரு. எம். சந்திரசேகரன், மாநகராட்சி செயற்பொறியாளர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் சேலம் அவர்களுடன் நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை கூட்டம் 24.04.2018 ஆம் தேதியன்று நடைபெற்றது (கூட்ட நடவடிக்கைகள் (Minutes of meeting) ந.க.எண்.2304/2005/SSI, நாள்:24.04.2018). அப்போது உதவி கோட்ட பொறியாளர், அவர்கள் தற்போது மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருவதாலும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாலும், பணிகள் மேற்கொள்வது குறித்து எவ்வித அனுமதியும் வழங்க இயலாது எனவும், மேலும் மேம்பாலப் பணிகள் முடிவுற்றவுடன் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் அமைக்க சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என நெடுஞ்சாலைத் துறை ந.க.எண்.23/2018-19/அ1, நாள்:09.11.2018 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், தற்போது மேம்பாலப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட நிலையில், நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை செயல்பாட்டிற்கு கொண்டுவர கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை, அவர்களிடம் சாலைகளை நேராய்வு செய்ய தொடர்ந்து கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, அவர்களின் தலைமையில் 19.05.2020ஆம் தேதியன்று மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுடன், ஆய்வு கூட்டம் நடைபெற்றதில், அன்று எடுக்கப்பட்ட முடிவுகள் பதிவு செய்யப்பட்டது (Minutes of meeting). அதனை தொடர்ந்து 22.05.2020 அன்று உதவி கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை அவர்களுடன் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கும் சாலைகளை மாநகராட்சி பொறியாளர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்து

மறுவடிவமைப்பு (Redesign) செய்து lifting station மற்றும் Pumping main அமைக்க ஏதுவாக இருக்கும் பகுதிகளுக்கான நிலையான திட்டம் வகுக்கப்பட்டது.

இந்நிலையில் நெடுஞ்சாலைத் துறையினருடன் நடத்திய கலந்தாலோசனைக் கூட்டத்தின் முடிவின்படி, மறு வடிவமைப்பு (Redesign) செய்து (lifting station மற்றும் pumping main அமைக்க வகுக்கப்பட்ட திட்டத்திலுள்ள இனங்கள் தம்முடைய ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்படவில்லை என்றும், தம்மால் இப்பணியினை செய்ய இயலாது என தெரிவித்து திருவாளர்கள். சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட் சென்னை நிறுவனத்தினர் ஒப்பந்த விதிகள் clause-62. Release from performance 62.1ல் குறிப்பிட்டுள்ளபடி தம்முடைய செயல்திறன் வங்கி உத்தரவாதச் சான்றினை விடுவிக்கவும், மேலும் பணியினை முன்முடிவு செய்து (Foreclosure) தமக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகைகளை வழங்கிடவும் கோரி கடித எண்.139/SCCL/Salem Package-III/2018 நாள்:24.06.2020ல், கடிதம் அளித்துள்ளதின்படி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மன்றம் தனது தீர்மான எண்.82, நாள்:01.07.2020ல் பணியினை செய்துள்ளவரை இறுதி செய்து முடிவுக்கு கொண்டுவர அனுமதித்துள்ளது.

ஆகவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள் சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட் சென்னை நிறுவனத்தினரின் செய்யப்பட்ட பணிகளுடன் பணியினை முடித்து இறுதி பட்டியல் தயார் செய்து முன்மொழிவுகளை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி பணிக்கான பணி முடிவு அறிக்கை பெறப்பட்டு தற்போது ஒருபகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை துறை சாலைகளில் திருத்திய வடிவமைப்புகளின்படி அனுமதி பெற்று குழாய் பதிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

**<u>சிப்பம்–2</u>**

மேற்படி திட்டத்தில் சிப்பம் 2க்கான கழிவுநீர் குழாய் அமைக்கும் பணியினை நிறைவேற்றிட 7வது அழைப்பாக 24.06.2010ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தகுதிவாய்ந்த திருவாளர். ஆர்.ஏ.யு.எஸ். கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிட், ஹைதராபாத் (M/s. R.A.U.S.Constructions Pvt. Ltd., Hydrabad) என்ற நிறுவனத்திற்கு மன்ற தீர்மான எண்.645, நாள்:23.09.2010ந் தேதியில் பெறப்பட்ட அனுமதியின் பேரில் பணி உத்திரவு 02.12.2010ல் வழங்கி ஒப்பந்தமிடப்பட்டது. மேற்படி பணியின் ஒப்பந்தத்தின்படி பல்வேறு கோட்டப் பகுதி தெருக்களில் கழிவுநீர் சேகரம் செய்திடும் குழாய் 150.65 கி.மீட்டர் நீளத்திற்கு சுடுமண் குழாய்கள் (SWP) மற்றும் கான்கிரீட் குழாய்கள் (RCC) பதித்தும் அதற்கான ஆள் இறங்கும் தொட்டி மற்றும் வீட்டிணைப்பு குழாய்கள் பதித்தும் மேற்படி பணியினை 36 மாத கால வரையறையில் பதித்து முடிக்க கீழ்காணும் அட்டவனையில் கண்டுள்ளவாறு அனுமதி வழங்கப்பட்டது.

| வரிசை எண். | பணி மேற்கொள்ளப்பட வேண்டிய விபரம் | ஒப்பந்தத்தின்படி பணிமுடிக்க வேண்டிய காலக்கெடு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 வது அளவீடு காலம் 6 மாதம் வரை | 2 வது அளவீடு காலம் 12வது மாதம் வரை | 3 வது அளவீடு காலம் 18வது மாதம் வரை | 4 வது அளவீடு காலம் 24 வது மாதம் வரை | 5 வது அளவீடு காலம் 30வது மாதம் வரை | 6வது அளவீடு காலம் 36 வது மாதம் வரை |
| 1. | பாதாளசாக்கடை அமைக்க தேவையான 200 மி.மீ. முதல் 375 மி.மீ. விட்டமுள்ள சுடுமண் குழாய்களை சாலையினை வெட்டி அதற்கான ஆழத்தில் பதித்து சோதனை செய்து வீட்டிணைப்பு குழாய்கள் பதித்தல் | 20 கி.மீ | 40 கி.மீ | 60 கி..மீ. | 80 கி.மீ | 100 கி.மீ | 119.29 கி.மீ |
| 2. | பாதாள சாக்கடை அமைக்க தேவையான 200 மி.மீ. முதல் 1400 மி.மீ. விட்டமுள்ள கான்கிரீட் குழாய்களை சாலையினை வெட்டி அதற்கான ஆழத்தில் பதித்து சோதனை செய்து வீட்டிணைப்பு குழாய்கள் பதித்தல் | 3 கி.மீ | 10 கி.மீ | 15 கி.மீ. | 20 கி.மீ | 25 கி.மீ | 31.36 கி.மீ |

மேற்கண்ட கால அளவீடுகளின்படி சிப்பம்-2ம் கழிவுநீர் சேகரம் செய்திடும் குழாய் பதிக்கும் பணியை ஒப்பந்ததாரர் இது நாள் வரை 70 மாதங்கள் கடந்தும் கீழ் கண்டுள்ள அளவிற்கு மட்டுமே (அளவு புத்தகத்தின்படி) பணிகள் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டின்படி பணி செய்ய வேண்டிய அளவு | அளவு புத்தகத்தின்படி செய்து முடிக்கப்பட்டுள்ள பணி | முடிக்கப்பட்ட பணிகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மொத்தம் பதிக்க வேண்டிய கழிவுநீர் குழாய் (SWM & RCC) கி.மீட்டர்) | 150.65 | 72.78 | 48.31% |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஆள் இறக்கும் தொட்டி கட்டுதல் (எண்ணிக்கை) | 4994 | 4537 | 90.90% |
| 3 | வீட்டிணைப்பு வழங்குதல் (கி.மீட்டர்) | 179.68 | 97.33 | 54.17% |

ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின்படி பணிகளை முடிக்காததால் வாராந்திர ஆய்வு கூட்டங்கள் மூலமாகவும், உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டங்கள் மூலமாகவும் பணியினை விரைவு படுத்தி முடித்திட தெரிவிக்கப்பட்டும் பணி தொய்வாக நடைபெற்று வந்ததால் இறுதி அறிவிப்புகள் 18.11.2014, 30.06.15, 24.07.15, 27.08.15, 28.10.15, 02.12.15ந் தேதிகளில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு இந்நிலையில் திருவாளர். ஆர்.ஏ.யு.எஸ். கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிட், ஹைதராபாத் (M/s/R.A.U.S.Constructions Pvt. Ltd., Hydrabad) நிறுவனத்தின் 04.01.2016ம் தேதிய கடிதத்தில் தமக்கு உடல் நல குறைவின் காரணமாக ஹைதராபாத்தில் இருந்து தொடர் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளதால் இப்பணி நடைபெறும் தளங்களுக்கு வந்து பணியினை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் இதனை தவிர்க்க மேற்படி பணியில் 25 சதவீதம் பணியினை தான் தேர்வு செய்த துணை ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பாலாஜி இன்ஜினியரிங், விருதாச்சலம் மூலம் செய்து முடிக்க அனுமதி கோரியதின் பேரில் ஒப்பந்தபுள்ளி நமூனாவில் அனுமதித்துள்ள தீர்ப்பாளர் (Adjudicater) திரு. எல். விஸ்வநாதன் அவர்களிடம் கருத்துரு மற்றும் மன்றத்தின் அனுமதியுடன் துணை ஒப்பந்ததாரரை வைத்து பணி மேற்கொள்ள 06.01.2016 தேதியில் அனுமதி அளிக்கப்பட்டது.

துணை ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்டும் பணியினை வேகப்படுத்தாமல் இருந்து வந்ததால் பல்வேறு முறை நேரில் அழைத்து ஆய்வு கூட்டம் நடத்தியும் பணியில் முன்னேற்றம் போதுமானஅளவு இல்லை என்பதால், பணியினை விரைவுபடுத்துமாறும் தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரால் மாநகராட்சியில் செலுத்தப்பட்ட செயல் திறன் வங்கி உத்திரவாத சான்று திரும்ப பெறப்படும் என தெரிவித்து தொடர் அறிவிப்புகள், 16.03.16, 30.05.16, 06.06.16, ஆகிய தேதிகளிலும் இறுதி அறிவிப்பு 30.08.2016 அன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

ஒப்பந்த தொகை ரூ.35.73 கோடியில் 49 பகுதி பட்டியல்கள் மற்றும் விலைவித்தியாச தொகையும் சேர்த்து ரூ.20.60 கோடி அளவுக்கு மட்டுமே பணி செய்து செலவு பட்டியல் பெற்று 70 மாதங்களை கடந்த நிலையிலும் 54 சதவீதம் பணிகள் மட்டுமே முடித்துள்ளார். அரசு செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டங்களிலும் பணிகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருப்பதை சுட்டிகாட்டப்பட்டுள்ளது. எனவே, பணி தாமதத்திற்கான காரணத்தினை தெரிவித்து பணியினை துவக்கிடவும் தெரிவித்து 09.11.2016-ம் தேதியில் அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு எவ்வித பதிலுரையும் மாநகராட்சிக்கு வழங்காமல் இருந்ததால், ஒப்பந்த விதி எண்.59ன்படி மீண்டும் , இறுதி அறிவிப்பு 24.11.2016-ல் ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டும் வேலை துவங்குவதற்கான எவ்வித உத்தரவாதமும் வழங்காமலும், இறுதி அறிவிப்புக்கான பதிலுரை எதுவும் அளிக்காமலும் இருந்து வந்ததால், ஏற்கெனவே செய்யப்பட்ட பணிகள் நிறைவடையாமலும் இருப்பதால் திட்டம் செயல்பாட்டுக்கு வராமல் மாநகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு வட்டி மற்றும் கடன் தொகை

செலுத்துவதன் மூலம் ஏற்பட்டு வருகிறது. எனவே மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் வருவாய் இழப்பினை தவிர்த்திட வேண்டி ஒப்பந்தத்தை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதிக்கு 23.12.2016ல் பொருள் வைக்கப்பட்டதில் மன்றம் தனது தீர்மான எண்.182, நாள்30.12.2016ல் பணியினை ரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதின் பேரில் திருவாளர். ஆர்.ஏ.யு.எஸ். கன்ஸ்டிரக்சன்ஸ் (பி) லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தினருக்கு 02.12.2010ல் பணி ஆணை வழங்கி 48% அளவிற்கு மட்டுமே பணி செய்தும், மீதமுள்ள பணியினை செய்யாமல் இருந்ததால் 31.12.2016ல் பணி ரத்து செய்யப்பட்டது.

சிப்பம்-2ல் மீதமுள்ள விடுப்பட்டுள்ள 77.87 கி.மீ. நீளத்திற்கு பணிகளை முடிக்க சீர்மிகு நகரத் (Smart City (ABD) திட்டத்தில் ரூ.85.39 கோடிக்கு மதிப்பீட்டில் பணியினை நிறைவேற்ற திருவாளர்கள் விவிவி கன்ட்ரக்ஷன்ஸ், பிரைவேட் லிமிடெட், (M/s. V.V.V. Constructions, Private Limited) சென்னை நிறுவனத்திற்கு 18.02.2020-ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியினை ஒப்பந்த காலமான ஆகஸ்ட் - 2022ல் முடிக்க ஒப்பந்ததாரருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**<u>கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்:</u>**

4 இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (DBOT) முறையில் வடிவமைத்து கட்டி இயக்கி பராமரித்து திரும்ப ஒப்படைக்கும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**<u>வெள்ளக்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Vellakuttai – Sewage Treatment Plant)</u>**

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட வெள்ளக்குட்டை பகுதியில் 13 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் MASP (Modified Activated Sludge Process) தொழில் நுட்பத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**<u>மான் குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Mankuttai – Sewage Treatment Plant)</u>**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் அலுவலகத்திற்கு உட்பட்ட அனைமேடு பகுதியில் 35 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**<u>அணைமேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Anaimedu – Sewage Treatment Plant)</u>**

சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட அணைமேடு பகுதியில் 6 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் FAB-MBBR (Moving Bed Bio Reactor) தொழில் நுட்பத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**<u>வண்டிப்பேட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Vandipettai – Sewage Treatment Plant)</u>**

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் அலுவலகத்திற்கு உட்பட்ட செவ்வாய்ப்பேட்டையில் வண்டிப்பேட்டை பகுதியில் 44 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் கட்டி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாராக உள்ளது.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. கோடியில் | ஒப்பந்ததாரர் பெயர் | செலவினம் ரூ. கோடியில் | |
|---|---|---|---|---|---|
| 4 | வெள்ளக்குட்டை சுத்திகரிப்பு நிலையம் (13 எம்.எல்.டி) (MASP) Modified Activated Sludge Process | 9.28 | மெசர்ஸ், சுப்பையா கன்ஸ்டிரக்சன் கம்பெனி சென்னை. | 9.96 | 07.10.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்று தற்போது வரை 4422 கழிவுநீர் வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தினசரி 4 எம்எல்டி அளவிற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வாறு வெள்ளக்குட்டை ஓடையில் விடப்படுகிறது. |
| 5 | வண்டிப்பேட்டை சுத்திகரிப்பு நிலையம் (44 எம் எல்டி) (FAB) Fludized Aerobic Bio-Reactor | 27.19 | மெசர்ஸ் ஜியோ மில்லர் - புது டெல்லி | 22.86 | 04.10.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையப் பணிகள் முடிவுற்று உள்ளன. கழிவுநீர் குழாய் பதிக்கும் சிப்பம் 2க்கான பணி ஒப்பந்தம் 31.12.2016ல் இரத்து செய்யப்பட்டதினால் மீதமுள்ள பணிகளை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.85.39 கோடியில் திருவாளர் விவிவி கன்ஸ்டிரக்சன் சென்னை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது பகுதி பணி முடிக்கப்பட்டவுடன் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும். |
| 6 | மான்குட்டை சுத்திகரிப்பு நிலையம் (35 எம்.எல்.டி) (FAB) | 17.18 | மெசர்ஸ், சுப்பையா கன்ஸ்டிரக்சன் | 17.76 | 30.12.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு சுத்திகரிப்பு கட்டுமான பணிகள் முடிவுற்று தற்போது வரை 4422 கழிவுநீர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Fluidized Aerobic Bio-Reactor | | கம்பெனி சென்னை | | வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தினசரி 3 எம்எல்டி அளவிற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வெளியேற்றப்பட்டு வருகிறது. |
| 7 | அணைமேடு சுத்திகரிப்பு நிலையம் (6 எம்.எல்.டி) (FAB-MBBR) Moving Bed Bio Reactor | 7.92 | மெசர்ஸ், ராம்கி இன்பராஸ் டெக்சர் ஹைதராபாத் | 5.79 | 03.12.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்று தற்போது வரை 4422 கழிவுநீர் வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தினசரி 4 எம்எல்டி அளவிற்கு பாதாளசாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து ஒப்பந்தத்தின் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வெளியேற்றப்பட்டு வருகிறது. |

மேற்படி கழிவுநீர் குழாய்கள் மொத்தம் பதிக்கவேண்டிய 421.67 கி.மீட்டரில் நீளத்தில் இதுவரை 352.92 கி.மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது. 3 சிப்பங்கள் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிக்கும் மற்றும் 4 சிப்பங்கள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கும் இதுவரை சிப்புத் திட்டப் பிரிவில் ரூபாய் 164.31 கோடியும் சீர்மிகு நகரத் திட்டத்தில் ரூ.12.90 கோடியும் ஆக மொத்தம் ரூ.177.21 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி முழுவதும் விடுபட்ட பகுதிகளான கோட்டம் எண்.9, 20, 21, 22, 31, 37, 50, 51, 52, 59, 60 மற்றும் பகுதி விடுப்பட்ட கோட்டங்கள் 1, 3, 4, 5, 6, 7, 8, 10, 23, 24, 25, 27, 28, 36, 38, 49, 54, 58ல் 520.00 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கவும், கழிவுநீர் உந்து நிலையம் 15 எண்ணிக்கையில் அமைக்கவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 2 எண்ணிக்கை உத்தேசிக்கப்பட்டு ரூ.530.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஜல்ஜீவன் திட்டம் (AMRUT 2.0) முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி 60 கோட்டங்கள் கொண்டதாகும் இதில் முந்தைய ஒப்பந்ததாரர்களால் நிறைவேற்றாமல் விடப்பட்ட பணிகள் தற்போது சீர்மிகு நகரத்திட்டம் மூலம் நடைபெற்று வருகிறது.

மேலும் சேலம் மாநகராட்சி விடுபட்ட பகுதிகள் மற்றும் பகுதி நிறைவேற்றப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் ரூ.530.00 கோடி மதிப்பீட்டில் அமைத்து முழுமைப்படுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.12.2021 அன்று அறிவிக்கப்பட்டு விரிவான திட்டப் பிரேரனை அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

மேலும் பாதாள சாக்கடை பணிகள் அனைத்தும் உரிய அரசின் அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று அதன் பேரில் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் நடைபெற்ற பணிகளுக்கு தேவையான தரச்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது.

இதேபோல் சிப்பம் 4 முதல் 7 வரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் பணி முடிக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் மூலம் சுத்திகரிப்பு நிலையம் நிறுவுதல் மற்றும் செயலாக்கத்திற்கான அனுமதி முறையே பெற்று தற்போது சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

- ❖ சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த Tamil Nadu Urban Development Project (TNUDP III) மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட தொழில் நுட்ப ஆலோசகர்களாக திருவாளர் கன்சல்டிங் என்ஜினியரிங் சர்வீஸ் இந்தியா (பி) லிமிட்., சென்னை நிறுவனம் நியமிக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் சேலம் மாநகராட்சி புவி அமைப்புகளுக்கு ஏற்றவாறு ஆய்வு செய்து வீடுகளில் இருந்து சேகரம் செய்திடும் பாதாளசாக்கடை கழிவுநீர் தானாக புவி ஈர்ப்பு உந்து விசை சக்தியால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரும் வகையில் முதற்கட்டமாக பழைய சேலம் நகராட்சி பகுதிகளில் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து வழங்கியுள்ளது. இதில் அந்தந்த தெருக்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப எந்த விட்டமுள்ள ' என்ன வகையிலான பாதாளசாக்கடை குழாய்கள் அமைக்க வேண்டும் எனவும், பயன்படுத்தப்படும் பொருட்கள் தரம் எந்த வகையில் இருக்க வேண்டும் என குறித்துதான் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணி மேற்கொள்ளும் போதும் அதன்படியே குழாய்கள் மற்றும் தளவாட பொருட்கள் பயன்படுத்தப்பட்டது. இப்பொருட்களுக்கு உரிய தரச்சான்று மூன்றாம் நபர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தரமான பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. உரிய ஆய்வு சான்று மற்றும் தரசான்று இணைக்கப்பட்டுள்ளது.

- ❖ சேலம் மாநகராட்சி புவி அமைப்புகளுக்கு ஏற்றவாறு ஆய்வு செய்து வீடுகளில் இருந்து சேகரம் செய்திடும் பாதாள சாக்கடை கழிவுநீர் தானாக புவி ஈர்ப்பு உந்து விசை சக்தியால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரும் வகையில் முதற்கட்டமாக பழைய சேலம் நகராட்சி பகுதிகளில் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கையினை CES நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள வாட்டங்களின் படியே குழாய்கள் பதிக்கப்பட்டு சேம்பர்கள் கட்டி நீர் செல்லும் பரிசோதனை செய்யப்படுகிறது. தற்போது அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, மற்றும் மான்குட்டை பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வீட்டு கழிவு நீர் தானாக் புவி ஈர்ப்பு உந்து விசையால் தினசரி வரும் சுமார் 28 எம்எல்டி கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது. பாதாளசாக்கடை திட்டமானது வீட்டு கழிவுநீர் (Sewage) மட்டுமே செல்வதற்காக தயாரிக்கப்பட்ட திட்டம் ஆகும். சாலையின் இரு மருங்கிலும் கட்டப்பட்டுவரும் மழைநீர் வடிகால்கள் மழை காலங்களில் மழைநீர் செல்லும் வகையில் கட்டப்பட்ட வடிகால்கள் ஆகும்.

- ❖ சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 4 எண்ணிக்கையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று சுத்திகரிப்பு நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. இந்நிலையங்களில் சுத்திகரிக்கப்படும் கழிவு நீர் மாசுக்கட்டுபாட்டு வாரியத்தின் மூலமாக தொடர் பரிசோதனை செய்யப்பட்டு BOD, COD அனுமதிக்கப்பட்டுள்ள அளவு உள்ளதா என கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் சுத்தகரிப்பு நிலையத்தில் அமையப்பெற்றுள்ள ஆய்வகத்தில் தினசரி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர்

ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. அசல் திட்ட அறிக்கை மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியம் அனுமதி பெற்றுள்ளவாறு சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் சுற்றுசூழல் ஏதும் பாதிக்கப்படுவதில்லை.

- ❖ சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்கள் பதிக்க அனுமதிக்கப்பட்ட 421.67 கி.மீட்டரில் நீளத்தில் இதுவரை 352.92 கிமீ நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது. 3 சிப்பங்கள் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிக்கும் மற்றும் 4 சிப்பங்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கும் இதுவரை சிறப்புத் திட்டப் பிரிவில் ரூபாய் 164.31 கோடியும் சீர்மிகு நகரத் திட்டத்தில் ரூ.12.90 கோடியும் ஆக மொத்தம் 177.21 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- ❖ சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டமானது உரிய தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமித்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 30 கோட்டங்களில் முழுமையாவும் 18 கோட்டங்களில் ஒரு பகுதி மட்டும் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அரசால் திட்ட நிதி ஒதுக்கி ஆணை பிறப்பித்து அதன் அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும்போது உபயோகப்படுத்தும் அனைத்து தளவாட பொருட்களும் உரிய தரசான்று அரசு அங்கீகாரம் பெற்ற பொறியியல் கல்லூரி மற்றும் மூன்றாம் நபர் ஆய்வுக்கு உட்படுத்தி சான்று பெற்ற பின்னரே அதன்படி பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் வீட்டிணைப்பு பதிக்கப்பட்ட பகுதிகளில் இணைப்புகள் வழங்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலமாக தினசரி 28 எம்.எல்.டி கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இரண்டாம் கட்டமாக விடுபட்ட கோட்டங்கள் தாழ்வான பகுதிகள் போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்திடவும் இதற்கான கழிவுநீர் குழாய் பதித்தல், நீர் உந்து நிலையம் அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் புதியதாக கட்டுதல் போன்ற பணிகளை தொழில் நுட்ப ஆலோசனையுடன் தயாரித்து வழங்கிட திருவாளர் Infra—EN பெங்களூர் என்ற நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனால் சேலம் மாநகர மக்களின் பொது சுகாதார மேம்பாட்டுக்கு கொண்டுவர வேண்டிய அத்தியாவசியமான பணியாகும்.

மேலும் தேசிய பசுமை தீர்பாயத்தில் திரு. மாணிக்கம் என்பவர் திருமணிமுற்றாறில் கழிவுநீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதன் தொடர்ச்சியாக மாண்பமை தேசிய பசுமை தீர்பாயத்தில் இடைக்கால தீர்புரையின்படி சேலம் மாநகரப் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகால் மூலம் திருமணிமுற்றாறில் கழிவுநீர் கலப்பது தடுக்கும் பணிகளான பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் INTERCEPTION AND DIVERSION பணிகள் விரைந்து மேற்கொள்ள அறிவுரை பெறப்பட்டது. அதன் பேரில் இப்பணிகள் விரைவாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ❖ விண்ணப்பதாரர் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் கோரியுள்ள வினாக்கள் அனைத்திற்கும் உரிய பதில் அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தொழில் நுட்பத்தின்படியேதான் பகுதி பணிகள் முடிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட குழாய்கள் உரிய மூன்றாம் நபர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தரச்சான்று பெற்ற பின்னரே பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. செய்து முடிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது வீட்டிணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு துர்நாற்றம் இன்றியும் மனித கழிவுகளை மனிதன் எடுக்காமல் தடுக்கப்படுகிறது. கழிவு நீர் தொட்டிகள் சுத்தம் செய்யும்போது மனித உயிரிழப்புகள் தடுக்கப்படுகிறது. தொற்று நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. சாக்கடை நீரில்

கழிவுகள் கலக்காமல் தடுப்பதால் பொதுமக்கள் நோய் நொடியின்று வாழ வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டமானது சேலம் மாநகர மக்களுக்கும் வாழ்வியலுடன் ஒன்றிய அவசியமான திட்டம் ஆகும் என்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், சேலம் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரது வாக்குமூலம் மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையரின் 10.5.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போதுவரை நடைபெற்று வருகிறது. இப்பணிகள் சாலை அமைப்பு, நகர அமைப்பு, மண் பரிசோதனை, வடிகால் அமைப்பு மற்றும் நிலத்தடி ஆய்வு ஆகியவை முறையாக செய்யப்படாமலும், நவீன முறைப்படி நன்கு தரமான M.D.P.E. போன்ற பைப்புகளைக் கொண்டும் தரமான சேம்பர்கள் கொண்டும் மேற்கண்ட திட்டத்தை சேலம் மாநகராட்சியால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, மேற்கண்ட திட்டப் பணி மக்களுக்கு நலம் பயக்கும் விதமாக செயல்படுத்தவும், தவறாக திட்டப்பணிகளை மேற்கொண்டுள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த Tamil Nadu Urban Development Project (TNUDP III) மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட தொழில் நுட்ப ஆலோசகர்களாக திருவாளர் கன்சல்டிங் எஞ்ஜினியரிங் சர்வீஸ் இந்தியா (பி) லிமிட் சென்னை நிறுவனம் நியமிக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் சேலம் மாநகராட்சி புவி அமைப்புகளுக்கு ஏற்றவாறு ஆய்வு செய்து வீடுகளில் இருந்து சேகரம் செய்திடும் பாதாளசாக்கடை கழிவுநீர் தானாக புவி ஈர்ப்பு உந்து விசை சக்தியால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரும் வகையில் தமிழ்நாடு அரசு அரசாணை எண்.60(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள்23.2.2006ல் ரூ.149.39/- கோடிக்கு கழிவுநீர் குழாய்கள் 421.65 கி.மீ. நீளத்திற்கு பதிக்கும் பணிகள் 3 சிப்பங்களாகவும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி 4 சிப்பங்களாகவும் செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. டி.என்.யூ.டி.பி.III வசம் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கு 09.10.2007ல் ஆட்சேபணை இன்மை சான்று பெறப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

***<u>சிப்பம் 1</u>***

சிப்பம் - 1ல் , மண்டலம் I மற்றும் IV-ல் 86.17 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி ஒப்பந்ததாரரால் 22.87 கி.மீ. நீளத்திற்கு மட்டும் கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு மார்ச்-2013 முதல் பணிகளை மேற்கொள்ளாததால் 15.7.2013ல் அந்நிறுவன ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இச்சிப்பப்பணி முந்தைய ஒப்பந்ததாரரால் ஆங்காங்கே பணிகள் பாதியில் விட்டு சென்றதால் மீளவும் மாமன்ற ஒப்புதலுடன் 6.3.2015ல் பணி உத்தரவு ரூ.19.27 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்சிப்பம் 1க்கான பணிகள் தளத்தின் நிலைக்கேற்ப ஒப்பந்த பணித் தொகையைவிட கூடுதல் ஆகும் நிலை ஏற்பட்டதால் பணி தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஒப்பந்ததாரர் தெரிவித்தன் அடிப்படையில் மாமன்றம் 1.7.2020ல் பணியினை செய்துள்ளவரை இறுதி செய்து முடிவுக்கு கொண்டுவர அனுமதித்துள்ளது. செய்யப்பட்ட பணிகளுடன் பணியினை முடித்து இறுதி

பட்டியல் தயார் செய்து முன்மொழிவுகள் தலைமை பொறியாளரால் 06.03.2015–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சிப்பம் 3க்கான பணியில் பிரதான குழாய் செல்லும் வழித்தடத்தில் நெடுஞ்சாலை துறையினர் ஈரடுக்கு மேம்பால பணியினை காரணம் காட்டி குழாய் பதிக்க அனுமதி வழங்கவில்லை. மேம்பால பணிகள் முடிவுற்றவுடன் பிரதான சாக்கடை திட்டப்பணிகள் அமைக்க சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் நெடுஞ்சாலைகளில் திருத்திய வடிவமைப்புகளின்படி அனுமதி பெற்று குழாய் பதிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என ஆணையர், சேலம் மாநகராட்சி அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. கழிவு நீர் குழாய்கள் மொத்தம் பதிக்க வேண்டிய 421.67 கி.மீ. நீளத்தில் இதுவரை 352.92 கி.மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி விடுபட்ட பகுதிகள் மற்றும் பகுதி நிறைவேற்றப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் ரூ.350.00 கோடி மதிப்பீட்டில் அமைத்து முழுமைப்படுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.12.2021 அன்று அறிவிக்கப்பட்டு விரிவான திட்டப்பிரேரனை அரசின் ஒப்புதலுக்காக உள்ளது என ஆணையர், சேலம் மாநகராட்சியின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

மேலும் பாதாள சாக்கடை பணிகள் அனைத்தும் உரிய அரசின் அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று அதன் பேரில் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் மேலும் நடைபெற்ற பணிகளுக்கு தேவையான தரச்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது என்றும் சிப்பம் 4 முதல் 7 வரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் பணி முடிக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் மூலம் சுத்திகரிப்பு நிலையம் நிறுவுதல் மற்றும் செயலாக்கத்திற்கான அனுமதி முறையே பெற்று தற்போது சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது என்பதையும் அறிய முடிகிறது.

திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தொழில் நுட்பத்தின்படியேதான் பகுதி பணிகள் முடிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட குழாய்கள் உரிய மூன்றாம் நபர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தரச்சான்று பெற்ற பின்னரே பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது; செய்து முடிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது வீட்டிணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் அறிய முடிகிறது.

இருப்பினும் மேற்கண்ட திட்டப் பணியானது. பல ஆண்டுகளாக நடைபெற்று வருவதாலும், பணி முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு இன்றும் வராத நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படும் நிலையை மனுதாரரின் புகார் மூலம் அறியமுடிகிறது. எனவே, பாதாள சாக்கடைப்பணிகள் காலதாமதமாக நடப்பதற்கான காரணங்களையும், பணிகளை துரிதப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் மூத்த கண்காணிப்பு பொறியாளர் நிலையில் உள்ள அலுவலரை நியமித்து உரிய கள ஆய்வு மேற்கொண்டு பாதாள சாக்கடை திட்டத்தை விரைந்து முடிக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் பாதாள சாக்கடை பணிகளை நிர்வாகம் ஒரு கால அட்டவணையை நிர்ணயித்து அதன்படி முழுவதுமாக முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், சுத்திகரிப்பு

நிலையங்களில் சுத்திகரிக்கப்படும் நீர் விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மாண்பமை தேசிய பசுமை தீர்ப்பாயம் தீர்ப்புரையின்படியும், கழிவு நீர் வடிகால் மூலம் திருமணிமுற்றாறில் கழிவு நீர் கலப்பதை தடுக்க பாதாள சாக்கடை திட்டப் பணிகளை விரைவாக செயல்படுத்திட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள ஆணையர், சேலம் மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் இப்பொருள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தி அவ்வப்போது பணிகள் முன்னேற்றத்தைக் குறித்துக் கண்காணிக்க கோரப்படுகிறார்.

2022-ஆம் ஆண்டு மே திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. M. சுந்தரம்,
   414, திருமலை நகர்,
   சன்னியாசிகுண்டு எக்ஸ்டன்சன்,
   கிச்சிப்பாளையம்,
   சேலம் - 636 015.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
3. ஆணையாளர்,
   சேலம் மாநகராட்சி,
   சேலம்.
4. இணை இயக்குநர்,
   ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக